# 1

# மாற்றுமுறைச் சர்ச்சைத் தீர்வும் குடும்பச் சட்டமும்

TML 001

ஒன்ராறியோவில் பெண்களுக்குரிய குடும்பச் சட்டம்



**எல்லோரும் பெண்கள்.**
**ஒரே குடும்பச் சட்டம்.**
அறியுங்கள் உங்கள் உரிமைகளை.

flew Family Law Education for Women
Women's Right to Know

fodf Femmes ontariennes et droit de la famille
Le droit de savoir

# மாற்றுமுறைச் சர்ச்சைத் தீர்வும் குடும்பச் சட்டமும்

*இந்த சிறுநூல் சட்டம் சம்பந்தப்பட்ட விடயங்களில் அடிப்படையான ஒரு விளக்கத்தை உங்களுக்குத் தரும் நோக்கத்துடன் வரையப்பட்டு உள்ளது. தனிப்பட்ட முறையிலான சட்ட ஆலோசனை மற்றும் உதவி என்பவற்றுக்கு இணையான ஒரு மாற்றீடாக இதனைக் கருத முடியாது. குடும்பச் சட்டம் தொடர்பிலான பிரச்சினைகளை நீங்கள் எதிர்கொள்ளும் பொழுது உங்கள் உரிமைகளைக் காப்பதற்காக, உங்களால் முடிந்த அளவு விரைவாக சட்ட ஆலோசனையைப் பெற்றுக் கொள்ளுங்கள். குடும்பச் சட்ட சட்டத்தரணி ஒருவரைக் கண்டுபிடித்து அவருக்குக் கட்டணமாக பணம் செலுத்துவது எப்படி என்பது பற்றி மேலதிக தகவல் பெறுவதற்கு www.onefamilylaw.ca என்ற எமது இணையத் தளத்தில் காணப்படும் "குடும்பச் சட்டம் சம்பந்தமான உங்கள் பிரச்சினைக்கு உதவி பெறும் வழி கண்டறிதல்" என்ற சிறுநூலைப் படியுங்கள்.*

நீங்களும் உங்கள் வாழ்க்கைத் துணைவரும் பிரியும்பொழுது சட்டமுறையிலான பல பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டி இருக்கும். உதாரணமாக நீங்கள் உங்களுக்கான பொருளாதார ஆதரவுபற்றித் தீர்மானிக்க வேண்டும். உங்கள் பிள்ளைகளை எப்படிப் பராமரிப்பது மற்றும் குடும்பச் சொத்துக்களை எப்படிப் பிரிப்பது போன்றன பற்றியும் முடிவு எடுக்க வேண்டும். இம்முடிவுகளை எடுப்பதற்காக நீங்கள் நீதிமன்றத்துக்குச் செல்ல முடியும். இதற்குப் பதிலாக இவை சம்பந்தமாக விதிக்கப்பட்ட முறைமைகளுக்கு வெளியே உங்கள் சொந்த ஏற்பாடுகளையும் நீங்கள் ஒழுங்கு செய்யலாம். அல்லது **மாற்றுமுறைச் சர்ச்சைத் தீர்வு** (alternative dispute resolution — ADR) வழிமுறையையும் பயன்படுத்தலாம்.

உங்களுடன் வன்முறையில் நடந்த அல்லது உங்களைத் துர்ப்பிரயோகம் செய்த ஒருவருடன் உங்கள் சர்ச்சையைத் தீர்ப்பதற்கு ADR வழிமுறையைப் பின்பற்ற வேண்டாம். உங்களிடம் அடாவடித்தனமாக நடக்க முயன்ற அல்லது உங்களைவிடக் கூடிய வலிமையைக் கொண்ட ஒருவருடன் சர்ச்சையைத் தீர்க்கவும் இவ்வழிமுறையைப் பயன்படுத்த வேண்டாம்.

## ADR வழிமுறை என்றால் என்ன?

மாற்றுமுறைச் சர்ச்சைத் தீர்வு வழிமுறை அல்லது ADR வழிமுறை என்பது விதிக்கப்பட்ட முறைமைகளுக்கு வெளியே கருத்து வேறுபாடுள்ள ஒரு பிரச்சினையைத் தீர்க்க முயல்வது ஆகும். இவ்விடயத்தில் மனிதர்கள் தாமாகப் பேரம் பேசலாம் அல்லது மத்தியஸ்தர் (mediator) அல்லது சமரசமுயற்சியாளர் (arbitrator) ஒருவரின் உதவியுடன் செயற்படலாம். பேரம்பேசுதல் (negotiation), மத்தியஸ்தம் (mediation), சமரசம் (arbitration) என்பவை ADR வழிமுறையின் பல்வேறு வகைகளாக அமைந்துள்ளன. குடும்பச் சட்ட வழக்கு ஒன்றின் தொடர்பாக ADR வழிமுறையினை பின்பற்றும்படி உங்களை யாரும் நிர்பந்திக்க முடியாது. நீங்களும் உங்கள் முன்னைய வாழ்க்கை துணைவரும் இதனைச் சுதந்திரமான முறையில் தெரிவு செய்யவேண்டும்.

ADR வழி முறையினை நீங்கள் பயன்படுத்த எண்ணினால் சட்டத்தரணி ஒருவருடன் அதுபற்றிக் கதையுங்கள். நீங்கள் அப்படிச் செய்யாமல் விட்டால் உங்களுக்கு இருக்கின்றதென நீங்கள் அறிந்து இருக்காத உங்கள் உரிமைகளை இழந்து விடவும் கூடும்.

## ADR வழிமுறையை எப்பொழுது நீங்கள் பயன்படுத்த முடியும்:

குடும்பச் சட்ட வழக்குகள் சிலவற்றுக்கு நீதிமன்றம் செல்வதைவிட ADR வழிமுறை மேலானதாக இருக்கும். இது ஏன் என்பதற்குக் காரணங்கள் பின்வருமாறு:

- உங்கள் வழக்குக்கு என்ன நடக்கிறது என்பதை நீங்கள் கூடுதலாகக் கட்டுப்படுத்த முடியும்.
- உங்கள் வழக்கினை எவ்வழியில் நடத்துவது என்பதை நீங்கள் தெரிவுசெய்ய முடியும்.
- நீதிமன்ற வழக்கு ஒன்றைவிட இது வேகமாக நகருவதுடன் அதைவிடச் செலவில் குறைவாகவும் இருக்கும்.
- நீதிமன்றத்துக்கு போவதைவிட இந்த அனுபவம் குறைந்த மனக்குழப்பம் தருவதாக அமையும்.

நீங்கள் உங்கள் வாழ்க்கைத் துணைவருடன் மனம்திறந்து நேர்மையாகக் கதைக்க முடியுமானால் உங்கள் உறவு முடிவடையும் பொழுது இருவருக்கும் இடையே உள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உங்கள் இருவருக்குமே ADR வழிமுறை ஒரு நல்ல பாதையாக அமையலாம். முடியும் என்றால் உங்களுக்கு உதவுவதற்கு நீங்கள் ஒரு சட்டதரணியை ஏற்பாடு செய்ய வேண்டும்.

ஆனாலும் ADR வழிமுறை எல்லாவிதமான சர்ச்சைகளுக்கும் நல்ல பொருத்தமாக இருப்பதில்லை. பின்வரும் சூழ்நிலைகளில் ADR வழிமுறை பொருத்தமாக இருக்காது என்று கருதப்படுகிறது:

- உங்கள் துணைவர் நீங்கள் சொல்வதைக் கேட்பதில்லை அல்லது உங்களை மதிப்பதில்லை என்று உணருகிறீர்கள்.
- நீங்கள் உங்கள் துணைவருடன் கதைக்க முடியாமல் இருக்கிறீர்கள்.
- நீங்கள் உங்கள் துணைவருடன் ஒத்துழைக்க முடியாமல் இருக்கிறீர்கள்.
- உங்கள் துணைவர் உங்களைத் துன்புறுத்துபவராக அல்லது வன்முறைக்கு உள்ளாக்குபவராக இருந்தது உண்டு.
- உங்கள் துணைவர் உங்களுடன் அடாவடித்தனமாக நடக்க அல்லது உங்களைப் பயமுறுத்த முயன்றது உண்டு.
- உங்கள் துணைவர் உங்களைத் தன் சுயநலத்துக்காகப் பயன்படுத்த முடியும்.
- உங்கள் துணைவர் உங்களைவிடக் கூடிய அதிகாரத்தைக் கொண்டு இருக்கிறார்.

## ADR வழிமுறையில் உள்ள பல வகைகள் எவை?

குடும்ப சட்டத்தின் கீழான சர்ச்சைகளை தீர்ப்பதற்கு நான்கு வகையான ADR வழிமுறைகள் உள்ளன. அவையாவன: பேரம் பேசுதல் (negotiation), மத்தியஸ்தம் (mediation), சமரசம் (arbitration), மற்றும் கூட்டிணைந்த குடும்பச் சட்டமுறை (collaborative family law).

## 1. பேரம் பேசுதல்

பேரம் பேசுதல் என்பது விதிக்கப்பட்ட முறைகளுக்கு அப்பால் மிகவும் சாதாரண முறையில் இடம்பெறுகிறது. நீங்களும் உங்களுடைய முன்னைய வாழ்க்கைத் துணைவரும் ஒருவரோடு ஒருவர் ஓர் உடன்பாட்டுக்கு வரும்வரையில் கதைத்து பேசுவீர்கள். நீங்கள் ஒருவருடன் ஒருவர் நேரடியாகக் கதைக்கலாம் அல்லது உங்கள் சார்பாக கதைப்பதற்கு நீங்கள் சட்டத்தரணிகளையும் அமர்த்திக் கொள்ளலாம். சிலவேளைகளில் ஒருவருக்கு சட்டத்தரணி இருக்கையில் மற்றவருக்கு அப்படியொருவர் இல்லாதும் போகலாம். பெரும்பாலான சட்டத்தரணிகள் வழக்கினை நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்லத் தீர்மானிப்பதற்கு முன்பாக பேரம்பேசுவதற்கு முயற்சி செய்வர்.

நீங்கள் இருவரும் பேரம் பேசும்பொழுது பேச்சு முறையிலான ஒரு உடன்பாட்டுக்கு வருவீர்கள். அந்த உடன்பாட்டை எழுத்தில் எழுதி இருவரும் அதில் கையெழுத்து இடுவதை உறுதிப்படுத்துங்கள். இந்த உடன்பாடு எழுத்தில் இல்லாது போகுமானால் அதனை நடைமுறைப்படுத்துவது கஷ்டமாக இருக்கும்.

## 2. மத்தியஸ்தம்

மனிதர்கள் ஒருவரோடு ஒருவர் கதைத்து பேசி ஒரு உடன்பாட்டுக்கு வருவதற்கு துணையாக ஒரு **மத்தியஸ்தர்** ஒருவர் உதவுகிறார். முரண்பாடுகளை எப்படிச் சமாளிப்பது என்பது பற்றி மத்தியஸ்தர் அறிந்து இருப்பார். மத்தியஸ்தர்கள் வழக்கமாக சமூகசேவைப் பணியாளர்களாக, உளவியலாளர்களாக அல்லது சட்டத்தரணிகளாக இருப்பார்கள்.

மத்தியஸ்தர் நியாயமாக நடக்கும் ஒருவராக இருக்க வேண்டும். அவர் உங்களுக்கோ அல்லது உங்கள் துணைவருக்கோ சார்பாக அந்தச் சர்ச்சையில் நடக்க முடியாது. அவர் சம்பந்தப்பட்ட முரண்பாட்டை தீர்ப்பதற்கு வழிகளை கூறலாம். ஆனால் அவரின் புத்திமதியை நீங்கள் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்ற நியதி இல்லை. அவர் சட்டரீதியான ஆலோசனையை உங்களுக்கு வழங்க முடியாது.

ஒரு மத்தியஸ்த முயற்சியில் நீங்கள் பங்கெடுக்க முன்னர் ஒரு சட்டத்தரணியிடம் அதுபற்றிக் கதைக்க வேண்டும். ஒரு சட்டத்தரணி உங்கள் உரிமைகளையும் பொறுப்புகளையும் உங்களுக்கு விளக்குவார். ஆனால் அவர் உங்களுடன் மத்தியஸ்தம் நடைபெறும் இடத்திற்கு வழக்கமாக வருவதில்லை.

மத்தியஸ்தம் செய்யும் முயற்சி உங்களுக்கு திருப்தி தரவில்லை என்றால் நீங்கள் வெளியேறலாம். அத்துடன் அது முடிந்து விடும். நீங்கள் ஒரு உடன்பாட்டுக்கு வர முடியாமல் இருந்தால் மத்தியஸ்தம் முடிவுக்கு வரும். அந்தக் கட்டத்தில் நீங்கள் ஒரு வித்தியாசமான யுனுசு வழிமுறையைப் பயன்படுத்த முயற்சி செய்யலாம். அல்லது நீதிமன்றத்துக்கு போகலாம். மத்தியஸ்த முயற்சியின் பொழுது நீங்கள் ஒரு உடன்பாட்டுக்கு வந்தால் ஒரு சட்டத்தரணி அதனை உங்களுக்காக வாசித்துப் பார்க்கும் வரையில் ஒப்பந்தத்தில் கையொப்பம் இடவேண்டாம்.

மத்தியஸ்த முயற்சி இலவசமான ஒரு சேவை ஆகும். ஒன்ராறியோவில் உள்ள எந்த ஒரு குடும்ப நீதிமன்றத்திலும் நீங்கள் ஒரு மத்தியஸ்தரின் உதவியைப் பெறமுடியும். உங்கள் பொருளாதார நிலைமை இடம் கொடுக்குமானால் நீங்கள் பிரத்தியேகமான முறையில் ஒரு மத்தியஸ்தரை சம்பளத்திற்கு அமர்த்த முடியும். நீங்கள் சட்டரீதியான ஆலோசனையைப் பெறுவதாயின் சட்டத்தரணிக்கு கட்டணம் செலுத்தவேண்டி இருக்கும்.

### 3. சமரசம்

சமரசமுயற்சியில் நீங்களும் உங்கள் முந்திய வாழ்க்கைத் துணைவரும் உங்கள் முரண்பாட்டினைத் தீர்க்கவென ஒரு மூன்றாவது நபரைச் சம்பளத்திற்கு அமர்த்துவீர்கள். இந்த நபர் **சமரசமுயற்சியாளர்** (arbitrator) எனப்படுவார். இந்தச் சமரசமுயற்சியாளர் விவாகரத்து (divorce) அல்லது விவாகத்தள்ளுபடி (annulment) ஒன்றினை வழங்கமுடியாது. ஆனால் பிள்ளைகளின் கட்டுக்காப்பு, ஆதார உதவித்தொகை, பிள்ளைகளின் அணுகல் உரிமை மற்றும் சொத்தினைப் பிரிக்கும் முறை என்பவற்றை அவர் தீர்மானிக்க முடியும். சமரசமுயற்சியாளர் நீங்கள் தீர்க்கும்படி கேட்கின்ற பிரச்சினைகள் சம்பந்தமாக மட்டுமே தீர்ப்பு வழங்கலாம். மேலும் சமரசமுயற்சியாளர் கனேடிய அல்லது ஒன்ராறியோ குடும்பச் சட்டத்தை மட்டுமே தனது சேவைக்குப் பயன்படுத்த வேண்டும்.

கனேடியச் சட்டங்களின் கீழ் உங்களுக்கு இருக்கும் உரிமைகள் பற்றி நீங்கள் அறிந்து இருக்கவில்லை என்றால் சட்டத்தரணி ஒருவருடன் அதுபற்றிக் கதையுங்கள். சமரசமுயற்சி ஆரம்பித்த பின்னர் நீங்கள் அதில் இருந்து விலகிச் செல்லமுடியாது. நீங்கள் சமரசமுயற்சியாளரின் தீர்மானத்துக்கு பணிந்து நடக்க வேண்டும். சமரசம் பணச்செலவுடன் கூடியதாக இருக்கும் ஏனெனில் உங்களுக்கு ஒரு சட்டத்தரணி தேவையாக இருக்கும்.

ஞாபகத்தில் வைத்திருக்கவும். சமரசம் என்பதும் மத்தியஸ்தம் என்பதும் ஒன்றல்ல. மத்தியஸ்த முயற்சியின்பொழுது உங்கள் விருப்பத்திற்கமையச் செய்யக்கூடிய தெரிவுகள் இருக்கும். பேச்சுவார்த்தையை நீங்கள் எந்த நேரத்திலும் நிறுத்திக் கொள்ளலாம். உங்கள் துணைவர் வழங்க முன்வருவதை அல்லது மத்தியஸ்தர் கூறும் ஆலோசனையை நீங்கள் ஏற்க மறுக்கலாம்.

ஆனால் சமரசமுயற்சியில் உங்கள் விருப்பத்தின்படி செய்யக் கூடியனவாக ஒன்றும் இருக்காது. சமரசமுயற்சியாளரின் தீர்மானத்தை நீங்கள் கட்டாயம் ஏற்கவேண்டும். அத்தீர்மானம் சட்டத்தைப் பின்பற்றி எடுக்கப்படும் வரையில் இது கட்டாயமான தேவையாக இருக்கும்.

## 4. கூட்டிணைந்த குடும்பச் சட்டமுறை

கூட்டிணைந்த குடும்பச் சட்டமுறை என்பது ஒரு புதிய வகையான ADR வழிமுறை ஆகும். இதில் நீங்களும் உங்கள் முன்னைய வாழ்க்கைத் துணைவரும் உங்கள் இருவரின் சட்டத்தரணிகளும் ஒன்றாகச் சேர்த்து பிரச்சினைகளை தீர்க்க முயலுவீர்கள். சட்டத்தரணிகள் இம்முயற்சியின் பொழுது செயல்படும் முறை மிகமாறுபட்ட ஒன்றாக இருக்கும். நீதிமன்றங்களில் மற்றவருக்கு தேவைப்படுவது என்ன என்று கருதாமல் சட்டத்தரணிகள் தமது கட்சிக்காரரின் உரிமைகளுக்காகப் போராட வேண்டி உள்ளது.

கூட்டிணைந்த குடும்பச் சட்டமுறை நீதிமன்றத்துக்குப் போவதை விட வழக்கமாக வேகமாகச் செயற்படுவதுடன் பணச் செலவிலும் குறைவாக உள்ளது. அத்துடன் நீதிமன்றத்தைவிட இம்முறை மிகவும் ஆறுதலான ஒரு சூழலிலும் நடைபெறுகிறது. ஆனால் வாழ்க்கைச் சோடிகள் எல்லோருக்கும் இது பொருத்தமான ஒரு முறையாக அமைவதில்லை. ஒருவரை ஒருவர் மதிப்பவர்களாக இருந்து தமது பிரச்சினைகளைத் தீர்க்க ஒன்றுசேர்ந்து முயலுபவர்களின் விடயத்தில் மட்டுமே இது வெற்றியளிக்க முடியும். ஒரு சட்டத்தரணியைச் சம்பளத்துக்கு அமர்த்தும் பொருளாதார வசதி படைத்தவர்கள் மட்டுமே கூட்டிணைந்த குடும்பச் சட்டமுறையினைப் பயன்படுத்த முடியும்.

சில சமயங்களில் கூட்டிணைந்த குடும்பச் சட்டமுறையினைப் பயன்படுத்தும் வாழ்க்கைச் சோடிகள் ஓர் உடன்பாட்டை அடைவதில்லை. இப்படி நிகழுமானால், நீங்கள் புதிதாக ஒரு சட்டத்தரணியை சம்பளத்துக்கு அமர்த்தி நீதிமன்றத்தில் உங்களுக்காக வாதிட வைத்தல் வேண்டும்.

கூட்டிணைந்த குடும்பச் சட்டமுறை பணச்செலவுடன் கூடியதாக இருக்கலாம். ஏனெனில் இதற்கு நீங்கள் ஒரு சட்டத்தரணியை அமர்த்த வேண்டி இருக்கும். உங்கள் சட்டத்தரணிக்கு கட்டணமாக எவ்வளவு நீங்கள் கொடுக்கிறீர்கள் என்பதைப் பொறுத்து உங்கள் செலவு அமையும். சட்ட நிதியுதவி அமைப்பு (Legal Aid) உங்களுக்கு உதவும் வகையில் சட்டத்தரணிக்குப் பணம் கொடுக்க மாட்டாது. கூட்டிணைந்த குடும்பச் சட்டமுறை தொடர்பான பேச்சுவார்த்தை தோல்வி கண்டால் நீதிமன்றத்தில் உங்களுக்காக வாதிட வேறு ஒரு சட்டத்தரணியை நீங்கள் சம்பளத்துக்கு அமர்த்த வேண்டி ஏற்படும்.

*நீங்கள் பிரெஞ்சு மொழி பேசும் ஒரு பெண்ணாக ஒன்ராறியோவில் வாழ்ந்து வருகிறீர்கள் என்றால் குடும்பச் சட்ட நீதிமன்ற நடைமுறைகளின் பொழுது பிரெஞ்சு மொழியில் சேவைகளைப் பெறுகின்ற உரிமை உங்களுக்கு உண்டு. உங்கள் உரிமைகள் பற்றி நீங்கள் மேலதிக தகவல் பெறுவதற்கு ஒரு சட்டத்தரணி அல்லது ஒரு சமூக சட்ட உதவி நிலையத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்: அல்லது பெமெயிட் (Femaide) என்று அழைக்கப்படும் ஆதாரத் தொலைபேசி இணைப்புடன் 1-877-336-2433 என்ற எண்ணிலும், செவிப்புலன் குறைந்தவர்கள் அதன் 1-866-860-7082 என்ற எண்ணிலும், தொடர்பு கொள்ளலாம். பிரெஞ்சு மொழியில் சேவைகள் பெறுவது எப்படி என்பது பற்றிய மேலதிக தகவலினை www.onefamilylaw.ca அல்லது www.undroitdefamille.ca. என்ற எங்கள் இணையத்தளத்திலும் நீங்கள் பார்க்க முடியும்.*

## பெறக்கூடியதாக உள்ள குடும்பச் சட்ட விடயங்களின் தலைப்புகள்*

1. **மாற்றுமுறைச் சர்ச்சைத் தீர்வும் குடும்பச் சட்டமும் (TML 001)**
2. பிள்ளைப் பாதுகாப்பும் குடும்பச் சட்டமும் (TML 002)
3. பிள்ளை ஆதார உதவித் தொகை (TML 003)
4. குற்றவியல் மற்றும் குடும்பச் சட்டம் (TML 004)
5. பிள்ளைக்கான கட்டுக்காப்பும் அணுகல் உரிமையும் (TML 005)
6. குடும்பச் சார்பு உடன்படிக்கைகள் (TML 006)
7. குடும்பச் சட்டச் சமரசம (TML 007)
8. குடிவரவாளர்களாக, அகதிகளாக, மற்றும் குடிவரவு அந்தஸ்து இல்லாதவர்களாக உள்ள பெண்கள் சம்பந்தப்பட்ட குடும்பச் சட்டப் பிரச்சினைகள் (TML 008)
9. குடும்பச் சட்டம் சம்பந்தமான உங்கள் பிரச்சினைக்கு உதவி பெறும் வழி கண்டறிதல் (TML 009)
10. குடும்பச் சட்டத்தில் சொத்து எவ்வாறு பிரிக்கப்படுகிறது (TML 010)
11. திருமணமும் விவாகரத்தும் (TML 011)
12. வாழ்க்கைத் துணையாள் ஆதார உதவித் தொகை (TML 012)

* *இந்த சிறுநூல் பல வடிவங்களிலும் பல மொழிகளிலும் கிடைக்கக் கூடியதாக உள்ளது. இது பற்றி மேலதிக தகவல் பெறுவதற்கு www.onefamilylaw.ca என்ற இணையத் தளத்தைப் பாருங்கள். உங்கள் குடும்பச் சட்ட உரிமைகளை நீங்கள் புரிந்து கொள்வதற்கு உதவும் வகையில் இந்த இணையத் தளத்திலும் மேலதிக விடயங்களை நீங்கள் காண முடியும்.*


flew Family Law Education for Women
Women's Right to Know

fodf Femmes ontariennes et droit de la famille
Le droit de savoir

Funded by: / Financé par :
Ontario

இவ் வெளியீடுகளில் தெரிவிக்கப்பட்டு இருக்கும் கருத்துக்கள் பெண்களுக்கான குடும்பச் சட்டக் கல்வி (FLEW) அமைப்பின் கருத்துக்களேயன்றி அவை மாகாண அரசின் கருத்துக்களைப் பிரதிபலிக்கின்றன எனக் கருத முடியாது.